NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 29 April 2015

# மக்கள் தொகை பிரச்சினைகளை ஆராயும் நிலையம்

ஆசியாவில் குடும்பம், மக்கள் தொகை பிரச்சினைகள் குறித்து ஆராய தேசிய பல்கலைக் கழகத்தில் நேற்று புதிய ஆய்வு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

'குடும்பம், மக்கள் தொகை ஆய்வு நிலையம்' என்ற அந்த அமைப்பு சிங்கப்பூரின் குறைவான பிறப்பு விகிதம், மூப்படையும் மக்கள் தொகை, குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற பிரச்சினைகளை ஆராயும் என்று பிரதமர் அலுவலக அமைச்சர் கிரேஸ் ஃபூ திறப்பு விழாவில் தெரிவித்தார்.

மக்கள்தொகை விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் திருவாட்டி கிரேஸ் ஃபூ, "ஆசிய சமூகங்களிடையே கன்ஃபியூஷியஸ் பண்புகள் ஆதிக்கம் செலுத்துகின்றன," என்றார்.

அதற்கு உதாரணமாக வீடு, வேலையிடங்களில் உள்ள பல்வேறு அதிகார நிலைகளை அவர் சுட்டிக் காட்டினார்.

"தற்போது பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்கள் குறித்த ஆய்வு, கொள்கைகளுக்குத் தீர்வு காண உதவும்," என்றார் அவர்.

சிங்கப்பூரின் குறைவான பிறப்பு விகிதத்தை மாற்றுவதற்கும் மூப்படையும் மக்கள் தொகையை ஆயத்தப்படுத்த தேவையான கொள்கைகளை வடிவமைப்பதற்கும் ஆய்வு நிலையம் கைகொடுக்கும் என்றும் அவர் சொன்னார்.

ஆனால் குடியேற்றங்கள் இல்லாமல் 1.2 என்ற நிலையில் இருக்கும் சிங்கப்பூரின் பிறப்பு விகிதம் காரணமாக சிங்கப்பூர் குடிமக்களின் தொகை 2025ஆம் ஆண்டுவாக்கில் சுருங்கிவிடும் என்பதை திருவாட்டி கிரேஸ் ஃபூ எச்சரித்தார்.

நம் நாட்டின் பிறப்பு விகிதத்தை உயர்த்த முடிந்தால், அளவான குடியேறுதல் வெளிப்படையாக அனுமதித்தால், மூத்த குடிமக்கள் சமூகத்துக்கு தொடர்ந்து பங்காற்றி வந்தால் நிலைமை மேலும் மேம்படும் என்றார் அவர்.

புதிய நிலையம் அமைப்பதற்கான செலவு $1.5 மில்லியன்.

இது, தேசிய பல்கலைக்கழக சமூகவியல் பிரிவின் பேராசிரியர் ஜீன் யூவங் தலைமையில் செயல்படும் என்று பல்கலைக் கழக தகவல்கள் தெரிவித்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.